**செய்தி வெளியீடு எண்: 174** **நாள் : 28.03.2016**

செய்தி வெளியீடு

தமிழ் நாடு அரசு

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

தலைமைச் செயலகம், சென்னை – 9

தமிழ் நாடு அரசு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசாணை (நிலை) எண்.16, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந 6(1)) துறை, நாள் 09.02.2016ன்படி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச / அத்தியாவசியமான தரம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை www.tn.gov.in என்ற அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி, மேற்காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச / அத்தியாவசியமான தரம் நிர்ணயம் செய்ததில் ஏதேனும் முன்னேற்றம் தேவைப்படும் பட்சத்தில் விருப்பமுள்ள நபர்களிடமிருந்து 11.04.2016க்குள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. ஆலோசனைகளை கீழ்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சமூக நல ஆணையர்,

2வது தளம், சிட்கோ பழைய கட்டிட வளாகம்,

திரு.வி.க. தொழிற்பேட்டை,

கிண்டி, சென்னை – 32.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**